# திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு.ம.மரிய சகாய ஆண்டனி,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

இருப்பு: திருநெல்வேலி.

## செயல்முறை ஆணை எண்.அ1/2768/2018 நாள்:17.09.2018

பொருள்: பணியமைப்பு – மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தொகுதி-தேர்வில் தேர்ச்சி பெற்று தட்டச்சராக பணிநியமனம் பெற்ற செல்வி.ரா.சங்கரம்மாள் என்பவருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை (1): இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை – 32 அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/3904/2016 நாள்:08.02.2016

(2): திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/1213/2016 நாள்:11.02.2016.

(3): செல்வி.ரா.சங்கரம்மாள், தட்டச்சர் அவர்களின் பணியேற்பு கடித நாள்:17.02.2016

-****-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தொகுதி-IV-ல் தட்டச்சராக தேர்ச்சி பெற்ற செல்வி.ரா.சங்கரம்மாள் அவர்கள் பார்வை (1)-ல் காணும் இயக்கக செயல்முறை ஆணைகளின்படி திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி செல்வி.ரா.சங்கரம்மாள் அவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. பார்வை (3)-ல் காணும் தனது பணியேற்புக் கடிதத்தின் வாயிலாக செல்வி.ரா.சங்கரம்மாள் அவர்கள் 17.02.2016 முற்பகல் இவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணியேற்றார். அதனைத் தொடர்ந்து அன்னாரின் கல்வித்தகுதி மற்றும் பணியமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மைத்தன்மை மற்றும் உடல் தகுதிச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் தட்டச்சர் பதவியில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதி 23(a)(i)-ன்படி தட்டச்சர் பதவியில் 17.02.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணியாளரது பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து செல்வி.ரா.சங்கரம்மாள் அவர்கள் 17.02.2016 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணியாளர் செல்வி.ரா.சங்கரம்மாள், தட்டச்சர் அவர்கள் 17.02.2016 முற்பகல் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும், Directorate of Technical Education-ஆல் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது,

17/9/18

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
திருநெல்வேலி.

17.9.18

பெறுநர்:

செல்வி.ரா.சங்கரம்மாள், தட்டச்சர்

17/9/18

நகல்:

1. அ1 பிரிவு